செ.வெ.எண்:14 நாள்: 10.06.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை குறித்த ஆய்வுக் கூட்டம்**

**மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.அனில் மேஷ்ராம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ,ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், கொரோனா நோய்தடுப்பு நடவடிக்கை குறித்த ஆய்வுக் கூட்டம் பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.அனில் மேஷ்ராம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ,ப., அவர்கள் முன்னிலையில் இன்று (10.06.2021) நடைபெற்றது.

**இது குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்திட முழு ஊரடங்கினை அறிவித்து பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூடுதலாக கொரோனா வைரஸ் நோயின் பாதிப்பினை கண்டறிய 100 நபர்களுக்கு ஒரு குழுவினை அமைத்து அவர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 10,018 நபர்களுக்கு கொரோனா வைரஸ் நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அதில் 8,432 நபர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு நலமுடன் வீடு திரும்பியுள்ளனர். தற்போது 1,447 நபர்கள் சிகிச்சை மேற்கொண்டு வருகிறார்கள். 139 நபர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். கொரோனா வைரஸ் பரவலினை கட்டுப்டுத்திடவும் மருத்துவமனைகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்திடவும் கட்டளை கட்டுப்பாட்டு மையம் (WAR ROOM) உருவாக்கப்பட்டு 19 குழுக்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 4 சிறப்பு கண்காணிப்புக்குழு, 22 சமூக இடைவெளி மற்றும் முகக்கவசம் அணிவதை உறுதிசெய்யும் குழு, 21 நகராட்சி பகுதிகளில் வார்டு அளவில் கண்காணித்திட குழுக்களும், கிராம ஊராட்சி அளவில் 152 குழுக்களும், பேரூராட்சி பகுதிகளில் 60 குழுக்களும், பொதுமக்களுக்கு காய்கறிகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதனை கண்காணிக்க 330 குழுக்களும் என மொத்தம் 608 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு 1,063 அலுவலர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் சிகிச்சை பெற்று வரும் கொரோனா நோயாளிகளுக்கு ஆக்ஸிஜன் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் விதமாக பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் புதிய ஆக்ஸிஜன் கொள்கலன் நிறுவப்பட்டு தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. சோதனை ஓட்டம் முடிந்தபின் நாளை மறுநாள் முதல் ஆக்ஸிஜன் கொள்கலன் செயல்படுத்தப்படவுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் போன்ற கொரோனா வைரஸ் நோய்தடுப்பு விதிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் 9,751 நபர்களுக்கு ரூ.22,07,500 அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நோய் தொற்றினை கட்டுப்படுத்திட பொதுமக்கள் நோய்தடுப்பு விதிமுறைகளை முறையாக பின்பற்றிட வேண்டும். பொதுமக்கள் கொரோனா வைரஸ் நோய் தொற்றின் பாதிப்பினை கருத்தில் கொண்டு அத்தியாவசிய தேவைகளின்றி வெளியில் சுற்றி திரிவதை தவிர்த்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.அனில் மேஷ்ராம் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.மணி இ.கா.ப.,, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.செ.ராஜேந்திரன், இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) திரு.டி.திருமால், சார் ஆட்சியர் திருமதி ஜெ.இ.பத்மஜா இ.ஆ,ப., துணை இயக்குநர்(சுகாதார பணிகள்) திருமதி கீதாராணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**